விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 095 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 10 திங்கட்கிழமை (24.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி குழு இலங்கை வருகிறது

### அரசியலமைப்புக் குறித்து ஆராயும்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி கண்காணிப்புக் குழு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

சுமார் ஒரு வாரகாலம் இலங்கையில் தங்கியிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி கண்காணிப்புக் குழு, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்டத் தினரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்ப்பாண மாவட்ட

## ஒருங்கிணைப்புக்குழு நாளை கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது நாளை (25) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் கடற்றொழில் அமைச்சரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இடம் பெறவுள்ளது.

தையிட்டியில் சட்டவிரோத

15ஆம் பக்கம் பார்க்க

## திடீர் சுகவீனத்தால் குடும்பப் பெண் மரணம்

### கரவெட்டியில் சம்பவம்

(கரணவாய்)

கரவெட்டிப் பகுதியில் திடீர் சுகவீனம் காரணமாக குடும்பப் பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கரவெட்டிச் சம்பந்தர் கடைப் பகுதியைச் சேர்ந்த குணசிங்கம் அன்பரசி

02ஆம் பக்கம் பார்க்க

## ஐந்து நாள் காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஐந்து நாள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி - தருமபுரம், உழவனூர் பகுதியைச் சேர்ந்த நடராசா இன்பராசா (வயது 56) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவாராவார்.

16ஆம் பக்கம் பார்க்க

# பிக்குகள் தங்குவதற்கு தையிட்டியில் கட்டிடம்

### நேற்றுத் திறந்து வைப்பு
### மக்கள் எதிர்ப்பு ; பொலிஸார் குவிப்பு

(தையிட்டி)

பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதியில் இராணுவத்தின் முழு முயற்சியுடன் அமைக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டிடம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தையிட்டி காணி உரிமையாளர்கள், அரசியல் தரப்புக்கள், பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## உழவு இயந்திரம் எனக்கூறி சொகுசு கார்கள் இறக்குமதி

### அம்பலத்துக்கு வந்த தகவல்

(கொழும்பு)

நாட்டில் ஆடம்பர வாகனங்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த வேளையில், விவசாயத் தேவைக்கு உழவு இயந்திரங்கள் இறக்குமதி செய்வதாகப் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு உழவு இயந்திரங்களுக்குப் பதிலாக சொகுசு கார்கள் இறக்குமதி செய்யப்பட்ட மோசடிகள் அம்பலத்துக்கு வந்துள்ளது.

மோட்டார் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் அண்மையில் கோபா குழுவின் முன் விசாரணைக்கு அழைக்

15ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பி கோலோச்சும்

### ரில்வின் சில்வா நம்பிக்கை



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும். போர் வெற்றியைச் சொல்லி வாக்கு வசூலித்த காலம் மலையேறிப் போய்விட்டது என்று ஜே.பி.பியின் பொதுச் செய

02ஆம் பக்கம் பார்க்க

### உள்ளூராட்சித் தேர்தல்

## வாக்குச்சீட்டுக்கள் அச்சிடல் பணி ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த 2022ஆம்

15ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத மதுச்சாலை பொலிஸாரால் முற்றுகை

### 2250 போத்தல் கோடா மீட்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி குமாரசாமிபுரம் பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையமொன்று நேற்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டதுடன் பெருமளவிலான சட்டவிரோத மதுபானங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குமாரசாமிபுரம் பகுதி

15ஆம் பக்கம் பார்க்க

## தென்னகோனுக்கு வீட்டுச் சாப்பாடு

(கொழும்பு)

தேசபந்து தென்னகோனுக்கு வீட்டிலிருந்து கொண்டு வரப்படும் உணவை உட்கொள்வதற்குச் சிறைச்சாலைகள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அவர் விடுத்த கோரிக்கையைப் பரிசீலித்ததன் பின்னர் இந்த

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நம்பி வாக்களித்த மக்களை தே.ம.சக்தி அரசாங்கம் ஏமாற்றுகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்



(களுத்துறை)

மக்களைத் தவறாக வழி நடத்தும் ஏமாற்று வேலைத் திட்டங்களையே தற்போதைய அரசு முன்னெடுத்து வருகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு களுத்துறை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இறுதி வரவு - செலவுத் திட்ட உரையின்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பல விடயங்களை ஐக்கிய மக்கள் சக்தி மீது முன்வைத்தார். தற்போதைய அரசு பல்டி அடிக்காது என ஜனாதிபதி தெரிவித்த போதிலும், மக்கள் விடுதலை முன்னணியினர் அன்று அரசியல் பல்டிகளை அடித்தனர்.

விமல் வீரவன்ச மக்கள் விடுதலை முன்னணியை விட்டு வெளியேறினார். அமைச்சரவை அமைச்சர்களாக இருந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் பலர் கட்சியை விட்டு வெளியேறிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. ஆகவே மக்கள் விடுதலை முன்னணியிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளன.

தற்போதைய அரசு போன்று மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறாமல், மக்கள் சார்பான முடிவுகளையே ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும். மக்களைத் தவறாக வழிநடத்தும் ஏமாற்று வேலைத்திட்டங்களையே தற்போதைய அரசு முன்னெடுத்து வருகின்றது. ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை மாற்றுவோம் என்று கூறினர்.

ஆனால், தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்து எந்த மாற்றமும் இல்லாமல் முன்னாள் ஜனாதிபதியின் (ரணில் விக்கிரமசிங்க) அதே தொங்கு பாலத்திலேயே பயணித்துக் கொண்டிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதியின் அதே கொள்கைகளையே இந்த அரசும் பின்பற்றுகின்றது. மக்களுக்கு ஒன்று சொல்லி ஆட்சிக்கு வந்த பிறகு வேறு எதையோ செய்து கொண்டிருக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியால் இது போன்ற எரிச்சலூட்டும் வேலையைச் செய்ய முடியாது.

மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்றி வழங்கிய வாக்குறுதிகளுக்குப் புறம்பாக வேறு கொள்கைகளை முன்னெடுப்பது வெட்கக்கேடான செயலாகும். மக்களை ஏமாற்றும் முடிவுகளை எடுக்க ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் தயாரில்லை என தெரிவித்துள்ளார். (ந-7)

### திடீர் ...

(வயது-49) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண் திடீர் சுகவீனமுற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு பாரப்படுத்தினார். (ம-7,60)

### உள்ளூராட்சி...

லாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அனைத்து இடங்களிலும்வென்றோம். எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

பாராளுமன்றத் தேர்தலின் போது கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணை அதிகரிக்குமே தவிர குறைவதற்கு வாய்ப்பு இல்லை.

பாராளுமன்றத் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்காதநபர்கள் கூட இந்தத் தேர்தலில் வாக்களிப்பார்கள்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகள் கொள்ளையர்களின் கூடாரங்களாக இருந்தன. மோசடிகள் இடம் பெற்றன. மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டவர்கள் ஒப்பந்தக்காரர்களாகவே செயற்பட்டனர் என்றார். (ந-7)


1ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 1979.07.23

ஆண்டவன் பிடியில் 2024.04.03

அமரர் கைலாசபதி ஜெயகாந்தன்

(உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் – வடக்கு மாகாணம்)

திதி : அமரபக்க தசமி

அன்பின் ஊற்றே பாசத்தின் உறைவிடமே
எம் மகனே சகோதரனே காந்தா!
உன் அழகிய வதனத்தையும் புன் சிரிப்பினையும்
நாம் காணாது பன்னிரண்டு மாதங்கள் ஆனாலும்,
என்றும் உன் நினைவாய் துயர் எனும் சாகரத்தில்
அப்பா, அம்மா, அண்ணா, சகோதரிகள் நாம்
காலனின் கொடுமையை நினைத்து அறிவிழந்து நின்ற போதும்
எம்மவனே உனது ஆத்மா வழி நாமும் என்றோ ஒருநாள்
இணைந்து வருவோம் என நினைத்து
அஞ்சலித்து சொரிகின்றோம் இக் கண்ணீர்ப் பூக்களை

(C-2523)

அத்தாய்,
அல்வாய்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்



உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ - 076 636 3378

E.mail: Valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முறைகேடான சொத்துக்களை

# அரசுடைமையாக்க புதிய சட்டம்

## ஏப்ரலில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

**கடந்த அரசாங்கங்களின் காலத்தில் சட்டவிரோதமாக அல்லது முறைகேடாக கையகப்படுத்தப்பட்ட அரச சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கான புதிய சட்டங்களை உள்ளடக்கிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியராச்சி தெரிவித்துள்ளார்.**



குறித்த சட்டமூலம் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டத்தின் மூலம், இந்த நாட்டில் அரச சொத்துக்கள் மற்றும் பொது நிதியை துஷ்பிரயோகம் செய்யும் தனி நபர்களின் எந்தவொரு சொத்தும் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் சட்டப்பூர்வமாக அரசுடைமையாக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியராச்சி மேலும் கூறியுள்ளார்.

பல்வேறு காலங்களில் இந்த நாட்டை ஆண்ட ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவர்கள், உறவினர்கள் என அனைவரும் ஒன்று கூடி நமது நாட்டின் அரச சொத்து, அரச வளங்கள் மற்றும் அரச நிதியை பல்வேறு வழிகளில் துஷ்பிரயோகம் செய்து கையகப்படுத்தியுள்ளனர்.

மேலும் அவர்கள் அவற்றைத் தங்களுக்கு சொந்தமாக்கியும் கொண்டுள்ளனர்.

நாங்கள் இந்த நாட்டு மக்களின் அபிலாஷைகளை நாளுக்கு நாள் நிறைவேற்றி வருகிறோம். மேலும் இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் நம்பிக்கையையும் எந்தவித சலசலப்பும் இல்லாமல் நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

### சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது

(கொழும்பு)

டுபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக நாட்டிற்கு சிகரெட்டுகளைக் கொண்டு வந்த இரண்டு சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், நேற்று முன் தினம் இரவு விமான நிலைய வருகை முனையத்தில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் குருநாகலைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேக நபரிடமிருந்து 10,000 சிகரெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் மற்றொரு பெண் சந்தேக நபரிடமிருந்து 23,600 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)

# கொழும்பு-கண்டி வீதியில் விபத்து 30 இற்கும் மேற்பட்டோர் காயம்



(கொழும்பு)

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் வரக்காபொல, தும்மலதெனிய பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதுடன் காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தில் கொழும்புக்கும் கண்டிக்கும் இடையில் இயக்கப்படும் இரண்டு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளே இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளதாக கூறப்படுகிறது. (நி-8)

# இந்த ஆண்டு இதுவரை 27 சூட்டுச் சம்பவங்கள்

## 22 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 27 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த 27 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 22 பேர் கொல்லப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

வெலிகம, அஹூங்கல்ல, தெவிநுவர, கல்கிஸ்ஸ, தொடங்கொட, மன்னார், அம்பலாந்தோட்டை, காலி, கொட்டாஞ்சேனை, மினுவாங்கொட, மித்தெனிய, ஜா-எல, கம்பஹா, வெலிவேரிய, மிதிகம, அம்பலாங்கொட, தெவுந்தர உள்ளிட்ட பல பொலிஸ் பிரிவுகளிலேயே இந்த 27 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. (நி-8)

# சருமத்தை வெண்மையாக்கும் ஊசி மருந்துகள் பறிமுதல்!

## நுகர்வோர் விவகார அதிகார சபை

(கொழும்பு)

சருமத்தை வெண்மையாக்குவதாகக் கூறப்படும் தரமற்ற ஊசி மருந்துகளுக்காகப் பயன்படுத்தப்படும் பல்வகையான மூலப்பொருட்களைக் கைப்பற்றியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் கொழும்பு புறக்கோட்டை பகுதியில் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போது சில வர்த்தக நிலையங்களிலிருந்து இவை கைப்பற்றப்பட்டுள்ளன.



குறித்த சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இதற்குச் சுகாதார அமைச்சு ஆதரவு வழங்கியுள்ளது.

மேலும் சருமத்தை வெண்மையாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஆபத்தான பல அழகு சாதனப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி-8)

# பண்டிகைக் காலத்தில் சுற்றிவளைப்புக்கள்

## பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை இலக்கு வைத்து அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களைத் தேடி மேற்கொள்ளும் சுற்றிவளைப்புக்களை அதிகரிக்கவுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பல்வேறு விலைகளில் சில போலி வர்த்தகர்களும், ஆலை உரிமையாளர்களும் அரிசி விற்பனை செய்வதோடு, அரிசியை மறைத்து வைத்துள்ளமை தொடர்பிலும் தகவல் கிடைத்துள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

பச்சை அரிசி, நாட்டரிசி, சம்பா, கீரிசம்பா அரிசி ஆகியவற்றுக்கு இப்போது உச்ச பட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் கடந்த மாதங்களில் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 500 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-8)

පාරිභෝගික කටයුතු පිළිබඳ අධිකාරිය
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
CONSUMER AFFAIRS AUTHORITY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்
# (29.03.2025-03.06.2027)



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப இராசியில் இருந்து மீன இராசிக்கு மாறுகிறார். மீன இராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருட காலத்துக்கு இந்த இராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன இராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப இராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு இராசியையும் பார்க்கிறார்.

## வெள்ளைமனம் கொண்ட கன்னி இராசி நேயர்களே!



**கன்னி**

உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்

**கன்னி:** வெள்ளை மனம் கொண்டு எளிதில் யாரையும் எதிலும் நம்பி விடும் பழக்கம் உடைய கன்னி இராசி நேயர்களே, அடுத்தவருக்கு செய்யும் உபதேசத்தில் பாதியளவாவது நீங்கள் அதைக் கடைப்பிடியுங்கள். உங்களுக்குப் பொதுவாக புத்திக் கூர்மையுள்ள மதிநுட்பம் மிகுந்த வாழ்க்கைத்துணை அமைந்திருக்கும். இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம்.

**கிரகநிலை:** இதுவரை உங்களது ரண ருண ரோக ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி களத்திர ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் பாக்கிய ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் ராசியையும், பத்தாம் பார்வையால் சுகஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** உங்களுக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும். வெளிநாடுகளுக்குச் சென்று வரும் யோகம் உண்டாகும். பிறரின் முகபாவனைகளைக் கண்டே அவர்களின் மனதை அறிந்து கொள்வீர்கள். தெய்வ வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். ஆன்மிகப் பெரியோர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். சமுதாயத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். அதேநேரம் இக்கட்டான சூழ்நிலைகளில் உணர்ச்சி வசப்படாமல் பொறுமை காக்கவும். வேகத்துடன் விவேகத்தையும் கூட்டிக்கொண்டால் உங்கள் செயல்கள் அனைத்தும் திட்டமிட்டபடி குறிக்கோள்களை எட்டும். ஏமாற்றங்களிலிருந்து தப்பிப்பீர்கள்.

புதிய முதலீடுகளில் ஈடுபட்டு வருங்காலத்தை வளமாக்கிக் கொள்வீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் திடீரென்று பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவை தானாகவே தீரும். தீயவர்கள் உங்களை விட்டு தாமாகவே விலகி விடும் அதிசயம் நிகழும். அதேநேரம் இளைய சகோதரர்களுடனான உறவில் சில சலசலப்புகள் ஏற்படும். ஆனாலும் விட்டுக் கொடுத்து நடந்துகொண்டு அவற்றை சமாளிப்பீர்கள். சிலர் தற்போது வசிக்கும் வீட்டிலிருந்து பெரிய வீட்டிற்குக் குடிபெயர்வார்கள்.

தொழிலில் அதிக முதலீடுகளைச் செய்வீர்கள். இதனால் வருமானம் குவியும். உங்கள் புகழும், கௌரவமும் உயரும். இது நாள் வரை தேவையற்ற வீண்பழி சுமந்த சிலர், அவற்றிலிருந்து விடுபடுவார்கள். உங்களின் முயற்சிகள் பலமடங்காக உயர்ந்து, அதற்கேற்ற வெற்றி கிடைக்கும் உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். திட்டமிட்ட செயல்கள் துரிதமாக நடக்கும்.

குடும்பத்தில் அரங்கேறும் சுப நிகழ்ச்சிகளால் சந்தோஷம் அடைவீர்கள். உங்கள் பேச்சில் அவ்வப்போது ஆணவம் தலைதூக்கலாம், கவனத்துடன் அதைத் தவிர்த்துக் கொள்ளவும். உங்களின் பேச்சாற்றல் அதிகரிக்கும். தன்னம்பிக்கை உயரும்.

உங்களின் எண்ணங்களை அடுத்தவர்கள் நல்ல முறையில் புரிந்து கொள்வார்கள். புதிய பொறுப்புகள் தாமாகவே தேடி வரும். வருமானம் நல்ல முறையில் வந்தாலும், சிலருக்கு குறுக்கு வழியில் செல்ல மனம் நினைக்கும். எனவே மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு நேர் வழியில் செல்லவும். இதன்மூலம் பல பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கலாம்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் நல்ல முறையில் இருக்கும். இதனால் மனதில் புத்துணர்ச்சி அதிகரிக்கும். உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சிலர் நெடுநாட்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வைப் பெறுவார்கள். மேலும் அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டாகும். உங்களின் வேலைகளைச் சரியாகத் திட்டமிட்டு செய்வீர்கள். மேலிடத்தின் நம்பிக்கைக்கு உரியவராக உயர்வீர்கள்.

வியாபாரிகள் பொறுமையுடன் செயற்பட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வருமானம் சிறப்பாகவே தொடரும். அதேசமயம் கூட்டாளிகளிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும். புதிய முதலீடுகளில் நன்றாகச் சிந்தித்த பிறகே ஈடுபடவும்.

அரசியல்வாதிகளின் பெயரும், புகழும் வளரும். புதிய பதவிகள் உங்களைத் தேடி வரும். பயணங்களால் நன்மை உண்டாகும். உங்களின் கடமைகளைச் சுறுசுறுப்புடன் செய்வீர்கள். தொண்டர்களின் ஆதரவுடன் பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். ஆயினும் எவரையும் பகைத்துக்கொள்ளாமல் உங்களின் வேலைகளில் மட்டுமே கவனமாக இருக்கவும்.

கலைத்துறையினருக்கு புகழும், பாராட்டும் கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும். சக கலைஞர்களிடம் உங்களின் ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைத் தக்கபடி பயன்படுத்தி பொறுப்புடன் நடந்து கொள்வீர்கள். சில நிறுவனங்களால் முந்தைய காலகட்டத்தில் நேரிட்ட மனவருத்தங்களை ஒதுக்கி வைத்துவிட்டு உழைப்பது முன்னேற்றத்திற்கு உதவும். ரசிகர்களை அரவணைத்துச் செல்வீர்கள்.

பெண்களுக்குக் குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்களை அனுகிப் பயன் பெறுவார்கள். சேமிப்பில் நல்ல கவனம் செலுத்துவீர்கள்.

ஆலயங்களுக்குச் சென்று ஆன்மீக பலம் பெறுவீர்கள். மற்றப்படி அனைவரிடமும் விட்டுக் கொடுத்து நடந்துகொண்டு குழப்பங்களைத் தவிர்க்கவும்.

மாணவர்களுக்கு நினைவாற்றல் பெருகும். இதனால் தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். மனதிற்குப் பிடித்த கேளிக்கைகளிலும், விளையாட்டுகளிலும் ஈடுபட்டு மகிழ்ச்சிக் கடலில் திளைப்பீர்கள். அதேநேரம் நண்பர்களிடம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுங்கள்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** வீண் செலவுகள் ஏற்படும். வாகனம் மூலம் செலவு உண்டாகலாம். பயண சுகம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். புதிய ஓடர்கள் கிடைப்பது தாமதப்படும்.

**அஸ்தம்:** தேவையான பண உதவி கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடற்சோர்வு உண்டாகலாம். சக ஊழியர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சித்திரை 1, 2ஆம் பாதங்கள்:** குடும்பத்தில் இருப்பவர்கள் சொல்வதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்வது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செல்வதன் மூலம் மனஅமைதி கிடைக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அவர்கள் எதிர்காலம் பற்றிய சிந்தனை எழும்.


**பரிகாரம்:** துர்க்கையை வழிபட்டு வரவும். முடிந்தால் புதன்கிழமைகளில் துர்க்கைக்கு நெய் விளக்கு ஏற்றி வலம் வரவும். புருஷசூக்தம் பாராயணம் செய்யவும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

## தேசிய விவசாயிகள் ஒன்றியம் எச்சரிக்கை





(கொழும்பு)

**நாடு முழுவதும் சுமார் 7 மாதங்களுக்கு கடுமையான அரிசி பற்றாக்குறை ஏற்படும் என தேசிய விவசாயிகள் ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னகோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

2024/2025 ஆம் ஆண்டு பெரும்போக பருவத்தில் இரு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் நெற் பயிர்கள் அழிந்துள்ளதாகவும், இது அரிசி பற்றாக்குறைக்கு முக்கிய காரணமாக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது 8,50,000 ஹெக்டேயர் அளவிற்கு நெல் பயிரிடப்பட்டுள்ளதாகவும், வெள்ளத்தால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல பகுதிகளில் குறைந்தபட்சம் 20% வரை எதிர்பார்த்த விளைச்சல் இழப்பாகியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், அறுவடை நேரத்தில் காட்டு யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளினால் நெல் வயல்கள் சேதமடைவதால், விளைச்சல் மேலும் குறையும்.

அரிசி பற்றாக்குறையை சமாளிக்க, அடுத்த பருவத்தில் குறைந்தது 7 இலட்சம் ஹெக்டேயர் பரப்பளவில் நெல் பயிரிடல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டில் அரிசி களஞ்சியம் குறையுமாயின் நாடு கடுமையான அரிசிப் பற்றாக்குறையை சந்திக்க நேரிடும் என்பதுடன், அரிசியை இறக்குமதி செய்யும் நிலை ஏற்படக்கூடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (நி-8)

# தேர்தல் பிரசாரத்துக்கு செலவிடக்கூடிய தொகை

## விரைவில் வர்த்தமானி அறிவித்தல்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் பிரசாரத்துக்காக வாக்காளர் ஒருவருக்குச் செலவிடக்கூடிய தொகை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தின்படி, தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு 5 நாட்களுக்குள் குறித்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.


இதன்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது வேட்பாளர் ஒருவர் வாக்காளருக்காகச் செலவிடக்கூடிய ஆகக்கூடிய தொகை அடங்கிய வர்த்தமானி அறிவிப்பு நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக வெளியாகும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி செயலாளர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளிடமிருந்து தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெற்றிருந்தது.

இந்தநிலையில், ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள சனத்தொகை அடர்த்தி மற்றும் நிலப் பரப்பைக் கருத்திற் கொண்டு, குறித்த தொகை தீர்மானிக்கப்பட்டு விரைவில் அறிவிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# அதானியின் திட்டத்தை முன்னெடுக்க தவறிய அரசு

## வருத்தம் தெரிவித்த ரணில்



(கொழும்பு)

மன்னாரில் அதானி நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கத் தவறியது குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருத்தம் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியின்போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இந்திய முதலீட்டாளர்கள் உட்பட இலங்கை அரசாங்கத்தால் ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு திட்டத்தை தொடர்புடைய பங்குதாரர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த அநுர அரசாங்கம் முயற்சிப்பதன் பின்னணியில் உள்ள நியாயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமை எதிர்காலத்தில் பெரிய அளவிலான முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒரு தடையாக இருக்கும் என்றும் இது குறித்துதான் கவலை அடைவதாகவும் தனது அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளைத் தொடருமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை வைப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடலை மையமாகக் கொண்ட ஆசியாவை நோக்கி உலகளாவிய சக்திமாற்றம் ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய ரணில் விக்ரமசிங்க, இலங்கை அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். (நி-8)

# இராசிபலன்

24.03.2025
பங்குனி 10, திங்கட்கிழமை
தசமி பின்னிரவு 1.15 மணிவரை

உத்திராடம் பின்னிரவு 12.50மணிவரை
சுபநேரம் 12.16-1.46 மணிவரை
இராகுகாலம் 07.46-09.16மணிவரை

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம் , திருவாதிரை

வளவன்

**மேஷம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இனிமையான நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கடகம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம்.

**ரிஷபம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மனக் குழப்பம் அகன்று ஆனந்தம் கூடும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், உடல் நலன் சீராகும், இல்லத்திலும், உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், இனிமையான நாள்.

**விருச்சிகம்** வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், பாராட்டும் புகழும் கூடும் நாள், கௌரவமான நாள்.

**கும்பம்** தொழிலில் சில மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், இறை வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வேலைச்சுமை கூடும்.

**கன்னி** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**நோயும் கடனும் எதிர்பார்ப்பும் இல்லாதவனின் தூக்கம் மிகவும் சுகமானது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை இலங்கைக்கு அழைத்து வர வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்



(யாழ்ப்பாணம்)

**ஈழ அகதிகள் நாடு திரும்புவது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்கள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கும் உரிய தரப்புக்களிடம் கோரிக்கை முன்வைக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் ஒபர் சிலோன் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக அது ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரவேண்டும் என போர் முடிந்ததிலிருந்து சொல்லப்பட்டு வருகின்றது என்பதையும் அவர்கள் மீண்டும் இங்கு வரவேண்டும் என்பதே இங்குள்ள எல்லோரது விருப்பம் என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த காலங்களில் இவ்வாறு இந்தியாவிலிருந்து வந்த ஒவ்வொருவர் தொடர்பான விபரங்களையும் பெற்று அவர்களுக்கு எத்தகைய தேவைப்பாடுகள் இன்னமும் இருக்கின்றன என்பதை அறிந்து அதனை உடனடியாக பூர்த்தி செய்ய வேண்டும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து 4 கட்டங்களாக இந்தியாவுக்கு 334-797 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர் என்றும் தற்போது தமிழகத்தில் 103 முகாம்களில் 58,104 பேர் இருக்கின்றனர் என்ற தரவுகளையும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் தெரியப்படுத்தினர். தற்போது தமிழகத்தில் முகாம்களிலுள்ள 58,104 பேரில், 50,620 பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் 2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வடக்கு மாகாணத்துக்கு 14,531 பேர் வருகை தந்துள்ளனர் என்றும் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

கொள்கை ரீதியான ஆவணம் ஒன்றை ஒபர் சிலோன் நிறுவனம் தயாரித்து வழங்கிய பின்னர் அதனை அடிப்படையாக வைத்து இலங்கை அரசாங்கத்டன்பேச்சு நடத்துவதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

நாடு திரும்ப விருப்பமானவர்களின் பட்டியலை ஒபர் சிலோன் நிறுவனம் வடக்கின் 5 மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கிய பின்னர் அவர்களுக்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாவட்டச் செயலர்கள் மேற்கொள்வார்கள் என ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் ஒபர் சிலோன் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், மேலதிக மாவட்டச் செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், சமுர்த்திப் பணிப்பாளர்கள், மாவட்டப் பதிவாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (6-8)

# கைதடியில் மகளிர் தினம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கைதடி மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கைதடி தென்மேற்கு சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி செல்வி ம.டஸ்னி தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென் மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் லலிதசங்கர், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சகிலா, கைதடி கலைவாணி பாடசாலை அதிபர் க.நடேஸ்வரன், கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையச் செயலாளர் செ.அல்கின் மற்றும் கைதடி மேற்கு கிராம அலுவலர் ரா.தர்ஷன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கைதடி மேற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.மோகனரூபன்,சமுர்த்தி உத்தியோகத்தர் ஈ.நிதுர்சன், கைதடி மாதர் சங்க ஒன்றியத் தலைவர் ம.நிர்மலா மற்றும் முன்பள்ளி ஆசிரியை மா.சாந்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-8-30)



கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம் - 5 மாணவர்களின் "சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2024" பாராட்டுதலும், பரிசில் வழங்குதலும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

# பெருமளவான கஞ்சா ஆழியவளையில் மீட்பு



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஆழியவளைப் பகுதியில் 80 கிலோ கஞ்சா போதைப் பொருள் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய முன்னெடுத்த நடவடிக்கையின் போது கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட குறித்த கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டது.

எனினும் இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை,

இந்நிலையில் மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருள் மருதங்கேணி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் சான்று பொருட்கள் கிளிநொச்சி நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். அதே வேளை பூம்பளை மூர்க்கன் கடற்கரை பகுதியில் 300 கிலோவிற்கு அதிகமான கஞ்சா பறிமுதல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-60)

# 28 கியூப் மணலுடன் டிப்பர் வாகனம் பறிமுதல்

## சாரதி பொலிஸ் பிணையில் விடுவிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமும் அதில் இருந்த 28 கியூப் மணலும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் வாகன சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

[illegible] பெற்றுள்ளது. இந்நிலையில் கைதான சாரதி பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் சான்றுப் பொருட்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக தருமபுர பொலிஸார் தெரிவித்தனர். (6-8-316)



### இலட்சா அர்ச்சனையும் 1008 சங்காபிஷேகமும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தான இலட்சா அர்ச்சனை நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு தினங்கள் நடைபெறவுள்ளன.

ஏழாவது நாளான எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்குகள் வைத்து சங்காபிஷேக நிகழ்வு இடம்பெறுவதுடன் வள்ளி தெய்வானை சமேத சண்முகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் அரங்கேறவுள்ளது.

ஆலய பிரதமகுரு பிரமஸ்ரீ ஜெகநாதக்குருக்கள் சந்திரசேகரக்குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசமே பதில் சொல்! உறவுகள் யாழில் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினர் நேற்று யாழில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நல்லூர், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வட்டுவாகலில் சரணடைந்தவர்கள் எங்கே!, கொலைகாரனால் நீதிவழங்க முடியுமா? கொடுப்பனவுகளை கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவே!, சர்வதேசமே பதில் சொல் போன்ற கோசங்களை எழுப்பி பதாகைகளை ஏந்தியவாறு யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர். (6-8-33)

# வேகநடைப் போட்டியில் சம்பியனான மன்னார் மாவட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான வேகநடைப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.கலையரசன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியதோடு, மன்னார் மாவட்டம் சம்பியன் கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான வேக நடைப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்றது. இதில் ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் மன்னார் மாவட்டம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

இப்போட்டியில் முதல் பத்து இடங்களை பிடித்தவர்கள் தேசிய மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.கலையரசன் 1 ஆம் இடமும், வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சஜிந்தன் 2 ஆம் இடமும், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த டி.தர்சன் 3 ஆம் இடமும், யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.கோபிநாத் 4 ஆம் இடமும், வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த விலிவண்ணன் 5 ஆம் இடமும், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.துவாரகன் 6 ஆம் இடமும், எஸ்.கேதீஸ் 7 ஆம் இடமும், கே.ஜனார்த்தன் 8 ஆம் இடமும் மற்றும் பி.டக்ஷன் 9 ஆம் இடமும், யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.நிரோஷன் 10 ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(6-8-90)

# மன்னார் டிப்பர் விபத்து; கைதான சாரதி மறியலில்

(மன்னார்)

மன்னார்-பள்ளமடு பெரியமடு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் குறித்த டிப்பர் வாகனத்தை செலுத்திச் சென்ற சாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை பெரியமடு பிரதான வீதியூடாக பயணித்த டிப்பர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்திற்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் காயமடைந்துள்ளனர். குறித்த டிப்பர் வாகனத்தின் சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த சாரதி மதுபோதையில் வாக னம் செலுத்தியமை தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில் அந்நபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரு சகோதரர்களில் ஒருவர் வீடு திரும்பியுள்ளார். (6-8-33)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 35<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L,Time Keeper<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15245 | பிறப்பு : 1994 இந்து<br>நட்சத்திரம் : சுவாதி<br>உயரம்: 5'2"<br>கி.பா:63<br>தகைமை/தொழில்: BSc, canada<br>எதிர்பார்ப்பு: only canada<br>தொ.இ: G/15266 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 18<br>6 இல் சூரி செவ்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: B/15247 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>2 இல் செவ்<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15269 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 38 ¾<br>1 இல் செவ்<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்: BSc,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15250 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:24 1/2<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: HNDA, Accounting Cleark(pvt)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15270 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# ஹெரோயின் மீட்பு இரு இளைஞர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப் பகுதியில் இரண்டு இளைஞர்கள் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மாவட்ட பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து 805 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 22 மற்றும் 23 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் பின்னர் அந் நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8-33)

# உழவு இயந்திர கலப்பையில் சிக்கிய இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

வயலில் உழுதுகொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து தவறி விழுந்து சுழல் கலப்பையில் சிக்கி இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ள சம்பவம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அகத்திக்குளம் பிரதேச வயலில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் கண்ணகி கிராமத்தை சேர்ந்த 16 வயது மதிக்கத்தக்க பெ.ஜீரோசன் என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த இளைஞன் குடும்பத்தில் மூத்த பிள்ளை என்பதுடன் இரு சகோதரிகளுடன் வாழ்ந்து வருவதுடன் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பாடசாலையில் இருந்து இடைவிலகி பல்வேறு தொழில்களை புரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் உழவு இயந்திர சாரதியாக வேண்டும் எனும் ஆசையில் நெருங்கிய நண்பர் ஒருவருடன் உழவு இயந்திரத்தில் பயிற்சி எடுத்து வந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

அத்துடன் உழவு இயந்திரத்தின் சாரதியான உயிரிழந்தவரின் நண்பன் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் சரணடைந்துள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்!

## 7 பேர் உயிரிழப்பு





(கீவ்)

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர். உக்ரைனிய நகரமான ஜாபோரிஷ்யாவில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ரஷ்ய ட்ரோன்கள் நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் உக்ரைனின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் மீது நடந்த ரஷ்ய ட்ரோன் தாக்குதல்களில் மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜாபோரிஷ்யா மீது 10 முறை தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் 14 வயது சிறுமியும் அவளது பெற்றோரும் உயிரிழந்துள்ளனர் என்றும் மேலும் ஒரு கைக்குழந்தை உட்பட 12 பேர் காயமடைந்தனர் என அந்நகரின் ஆளுநர் இவான் பெட்ரோவ் தெரிவித்துள்ளார். அத்துடன் இடிபாடுகளுக்கிடையில் காயடைந்தவர்களை மீட்கும் பணியில் வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் வடகிழக்கில் உள்ள சுமி பகுதியில் உள்ள கிராமத்தில் ரஷ்யா குறைந்தது 6 குண்டுகளை வீசியதாகவும். இதில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் கிழக்கில் உள்ள டோனட்ஸ்க் பகுதியில் நடந்த தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர் என்றும் 9 பேர் காயமடைந்தனர் என்றும் அம் மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இதனையடுத்து ரஷ்யாவின் வோரோனிஸ், பெலோகிராட் ரோஸ்டோவ் வோலோகிராட் உள்ளிட்ட பகுதிகள் மீது உக்ரைன் ஏவிய 47 ட்ரோன்களை இடைமறித்து அளித்ததாகவும், மொத்தம் 6 பேர் காயமடைந்ததாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை போர் நடைபெறும் எல்லையில் இருந்து 700 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ரஷ்யாவின் ஏங்கல்ஸ் இராணுவ விமானத்தளம் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# வேகமாக உருகு

# பாதிப்புக்குள்

## யுனெஸ்கோ வெள

(வோஷிங்டன்)

**கடந்த மூன்று ஆண்டுகளில்**
**அளவுக்கு அதிவேகமாக பனிப்ப**
**உருகிக்கொண்டிருப்பதாக யுனெ**
**வெளியிட்டுள்ள அறிக்கையில் அ**
**தகவல் வெளியாகி உள்ளது.**


**இதன் விளைவுகள் உலகம் முழுவது**
**லிக்கும் என்று விஞ்ஞானிகள் அச்சப்**
**கிறார்கள்.**

கடந்த 13 ஆம் திகதி ஜெனிவாவில் நடந்த கூட்டத்தில் பனிப்பாறைகள் குறித்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இதன் விபரங்கள் தற்போது வெளியாகி உள்ளன. இதன்படி, 1975 ஆம் ஆண்டிலிருந்து 9 ஆயிரம் GIGA TONNE அளவுக்கான பனிப்பாறைகளை இழந்துள்ளதாக உலக பனிப்பாறைகள் கண்காணிப்பு அமைப்பின் இயக்குநர் மைக்கேல் ஸெம்ப் தெரிவித்துள்ளார்.

பனிப்பாறைகள் உருகுவதன் காரணமாக கடல் மட்டம் அதிவேகமாக உயரும்

என்று
பலகே
பாதிக்
உள்ள
வித்தா
பன
வதா
மில்ல
உயரு

# அவலட்சணமான மீனுக்கு கிடைத்த அங்கீகாரம்



(வெலிங்டன்)

உலகின் அவலட்சணமான மீனாகக் கருதப்படும் பிளாப் மீனை நியூசிலாந்தைச் சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்பு ஒன்று இந்த ஆண்டுக்கான மீனாகத் தெரிவு செய்துள்ளது.

நியூசிலாந்தின் சுற்றுச்சூழல் அமைப்பானது அண்மையில் நடத்திய வாக்கெடுப்பில், பிளாப் மீனைப் பாதுகாக்க அதிக வாக்குகள் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே பிளாப் மீனுக்கு இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

உடல் முழுவதும் வழுவழுப்பாக இருக்கும் இந்த மீன், ஒரு அடி நீளம் வளரக்கூடியது. அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து கடற்பகுதிகளில் 2,000 முதல், 4,000 அடி ஆழத்தில் வாழ்கின்றன எனவும், இவற்றினால் ஏனைய மீன்களைப் போன்று விரைவாக நீந்த முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வகை மீன்கள் மனிதர்கள் உண்பதற்கு உகந்ததல்ல என்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# தென்கொரியாவில் காட்டுத்தீ 4 பேர் உயிரிழப்பு

## அவசரகாலநிலை பிரகடனம்

(சியோல்)

தென் கொரியாவின் தெற்குப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 4 பேர் உயிரிழந்துள்ளதோடு, நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளமையால் அந்நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


கடந்த 21 ஆம் திகதி தெற்கு தென் கொரியாவில் தெற்கு சான்சியோங் கவுண்டி உள்ளிட்ட மூன்று வெவ்வேறு பகுதிகளில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.

இந்தத் தீவிபத்தில் சிக்கி 4 பேர் உயிரிழந்துள்ளதோடு, 6 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வரை 25 சதவீத தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கொரிய வனத்திணைக்களம் தெரிவித்துள்ளார்.

சுமார் 847 ஹெக்டேயர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது. சான்சியோங்கில் வசிக்கும் சுமார் 260 பேர் வெளியேறியுள்ளனர். இதேவேளை, தென்கிழக்கு நகரமான உல்சானிலும் அருகிலுள்ள கியோங்சாங் மாகாணத்திலும் சுமார் 620 குடியிருப்பாளர்கள் சனிக்கிழமை வெளியேறியுள்ளதாகவும் தென்கொரிய உள்நாட்டு மற்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தென் கொரியாவில் தெற்குப் பகுதிகளில் அனர்த்த அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு, சான்சியோங் பகுதி விசேட அனர்த்த வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கும் பனிப்பாறைகள் ...ள்ளாகும் உலகம்!

## ...வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

...ரில் இல்லாத ...னிப்பாறைகள் ... யுனெஸ்கோ ...ில் அதிர்ச்சித் ...

...ழுவதும் எதிரொ... அச்சம் தெரிவிக்...



என்றும் இதன் விளைவாக பலகோடி பேர் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய அபாயம் உள்ளதாகவும் ஸெம்ப் தெரிவித்தார்.

பனிப்பாறைகள் உருகுவதால், கடல் மட்டம் 25 மில்லி மீற்றர் அளவுக்கு உயரும் என்றும் ஒவ்வொரு மில்லிமீற்றர் கடல்மட்டம் உயர்வு என்பது கூடுதலாக 3 லட்சம் பேரை வெள்ளப் பாதிப்புக்குள்ளாக்கும் என்றும் ஸெம்ப் அச்சம் தெரிவிக்கிறார்.

அன்டார்ட்டிக் மற்றும் கிரீன்லாந்து உட்பட உலகம் முழுவதும் தற்போது 2 லட்சத்து 75 ஆயிரம் பனிப்பரப்புகள் மட்டுமே இருப்பதாக உலக வானிலை ஆய்வியல் அமைப்பு இயக்குநர் தெரிவித்தார்.

பனிப்பாறைகளை பாதுகாப்பது என்பது உலக சுற்றுச் சூழலை பாதுகாப்பதாகும் என்றும் அவர் வலியுறுத்துகிறார். (நி-8)

## ஹீத்ரோ விமான நிலையம் வழமைக்குத் திரும்பியது!



(லண்டன்)

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் ஏற்பட்ட மின் தடையால் நிறுத்தப்பட்டிருந்த விமான சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமான நிலையத்திற்கு அருகில் உள்ள உப மின் நிலையமொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பாரிய தீப்பரவல் காரணமாக விமான நிலையத்திற்கான மின் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டிருந்தது

இதனையடுத்து விமான நிலையம் முழுமையாக மூடப்பட்டதோடு சர்வதேச அளவில் பல விமான சேவைகளுக்குத் தடங்கல் ஏற்பட்டிருந்தது.

மின் விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக சுமார் 1,351 விமானப் பயணங்கள் பாதிக்கப்பட்டதோடு 200,000 இற்கும் மேற்பட்ட பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

லண்டனின் மேற்குப் பகுதியிலுள்ள 16,300 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 150 பேர் வரை தீப்பரவல் ஏற்பட்ட பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டதாகச் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் லண்டன் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)

## ஹமாஸ் உளவுத் தலைவரை வீழ்த்தியது இஸ்ரேல்



(ஜெருசலேம்)

தெற்கு காசாவில் ஹமாஸின் இராணுவ உளவுத் துறைத் தலைவரை கொன்றதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அத்தோடு, குறித்த ஹமாஸ் தலைவரின் பெயர் ஒசாமா தபாஷ் என்றும் இஸ்ரேல் இராணுவம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அவர் ஹமாஸ் அமைப்பின் கண்காணிப்பு மற்றும் இலக்கு பிரிவின் தலைவராக இருந் ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பணயக் கைதிகள் பரிமாற்ற போர்நிறுத்த காலம் நிறைவடைந்துள்ள நிலையில், இஸ்ரேல் இராணுவம் காசா மீதான தாக்குதல்களை மீண்டும் தொடங்கியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், சில நாட்களாக ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர்களை இலக்கு வைத்து இஸ்ரேல் துல்லியமான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதன்படி, இஸ்ரேல் இராணுவத்தால் கடந்த சில நாட்களுக்கு முன்னர் காசாவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் அடுத்தடுத்து ஹமாஸ் அமைப்பின் பல தலைவர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (நி-8)

## ரீ, கோப்பி குடிப்பவர்களா? வந்தது எச்சரிக்கை

### மக்களே அவதானம்

(டில்லி)

ஒரு நாளைக்குத் தினமும் 2 வேளை இனிப்பான ரீ, கோப்பி குடிப்பவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற் கான வாய்ப்புகள் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர் பில் மேலும் தெரியவருவதாது,

இந்தியாவில் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள டாட்டா இன்ஸ்டியூட் ஒப் பண்டமென்டல் ரிசர்ச் நிலைய ஆராய்ச்சியாளர்கள் சில எலிகள் மூலம் நீரிழிவு நோய் குறித்து ஆராய்ச்சி செய்தனர்.

அப்போது சில எலிகளுக்கு ஒரு நாளைக்கு 4 முதல் 5 தடவை 100 மில்லிலீற்றர் அளவுள்ள சர்க்கரை கலந்த இனிப்பான ரீ, கோப்பி மற்றும் குளிர் பானங்களைக் கொடுத்தனர்.

2 ஆண்டுகள் நடந்த ஆராய்ச்சி முடிவில் அனைத்து எலிகளுக்கும் சர்க்கரை நோய் மற்றும் உடல் பருமன் ஏற்பட்டது தெரியவந்தது.

ஆராய்ச்சியின் முடிவின் மூலம் ஒரு நாளைக்கு தினமும் 2 வேளை இனிப்பான ரீ, கோப்பி குடிப்பவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற் கான வாய்ப்புகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது

அத்துடன் ரீ, கோப்பியில் உள்ள சுக்ரோஸ் என்ற அமிலம் கல்லீரல் தசைகள் மற்றும் சிறுகுடல்களில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது.

சர்க்கரை இல்லாத ரீ, கோப்பி குடிக்க முயற்சி செய்யுங்கள். குளிர்பானங்களை அறவே தவிர்ப்பது நல்லது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலத்தில் விசேட நடவடிக்கை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் வன்முறைச் சம்பவங்களைக் குறைப்பதற்கும் அதிகாரிகள் வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்தி வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸாரின் தேர்தல் பிரிவு, தேர்தல் சட்டமீறல்கள் மற்றும் நாடு தழுவிய வன்முறை நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகளை தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. அனைத்து சம்பவங்களும் பதிவு செய்யப்படுகின்றன. எந்தவொரு மீறல்களுக்கும் எதிராக நாங்கள் உடனடி நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் போது சிறப்பு முன்னெச்சரிக்கைகள் செயற்படுத்தப்பட்டன.

தற்போது, வழக்கமான பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன, தேர்தல் நாள் நெருங்கும்போது பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் கூடுதல் பாதுகாப்புக்கான பொலிஸ் குழுக்களை கடமையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளோம்.

கொழும்பில் வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதை மேற்பார்வையிடுவது உட்பட, தேர்தல் நடவடிக்கைகளைப் பாதுகாக்கும் பணியை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றார்கள்.

தேர்தல் காலத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்களைக் குறைப்பதற்காக, பொலிஸாரின் சிறப்புப் படை மற்றும் முப்படை வீரர்கள் போன்ற சிறப்புப் பிரிவுகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவித்தார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 500 | 450-500 | 600 |
| தக்காளி | 200 | 200 | 150-180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 200-250 | 200 |
| கோவா | 300 | 300 | 270 | 320 |
| கரட் | 600 | 700 | 550 | 600 |
| பூசணி | 140 | 140 | 80-100 | 200 |
| புடோல் | 180 | 150 | 150 | 250 |
| வாழைக்காய் | 150 | 150 | 80-100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 80-200 | 150 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 140 | 150 |
| பாகற்காய் | 450 | 600 | 500 | 600 |
| வெண்டைக்காய் | 300 | 200 | 250 | 500 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 150 | 300 | 200-250 | 450 |
| லீக்ஸ் | 350 | 300 | 250 | 250 |
| பீற்றூட் | 150 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 650 | 500 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 2500 | 1500 | 2500 | 2400 |
| போஞ்சி | 400 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 220 | 230 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 300 | 200 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 200 | 150-250 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 400 | 400 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 100 | 50 | 60 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | 200 |

# யாழ்ப்பாண கம்பன் விழா

## ஒரு விமர்சனப் பார்வை

நயினை.கி.கிருபானந்தா
பொருளாளர்,
யாழ்ப்பாண கம்பன்கழகம்.

(நேற்றைய தொடர்ச்சி)

கடவுள் வாழ்த்தை ம.தயாபரன் மதுரமான குரலில் இதமான அருவியாகக் கொட்டத்தொடங்கியதை சபை கண்டு கழித்தது. தலைமை உரை ஆற்றிய வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் பேசினார். இல்லை கர்ச்சித்தார். கேட்கும் அனைவரையும் தனது வசீகரிக்கும் பேச்சால் கட்டிப் போட்டார்.

ஒலி பெருக்கி முன் உச்சரிக்கும் சொற்கள் காற்றில் மிதந்து வந்து காதுகளை அடையும் போது மொழியின் அர்த்தம் முழுமை பெற்றது. தொடக்கவுரை ஆற்றிய ஸ்ரீ மான்சாய் முரளி. வாழை மரம் கட்டிய வாசலைப்போல வார்த்தைகள் வீகரம் கொண்டு வரவேற்றது. உரையாற்றும் போது பார்வையாளர்களோடு பாசாங்கின்றி பகிர்ந்து கொள்ளும் பாங்கும் சமயங்களில் உரையை உரையாடலாய் மாற்றும் உன்னதமும் உற்சாக அலையை உருவாக்கியது. அவரின் உரையின் பின்னே இசைந்து இருந்தனர் பார்வையாளர் கூட்டம்.

**நாடக அரங்கு**

பார் ஆண்டவர்களும்

பார் ஆள்பவர்களும் சந்தித்தால்.

இணைப்பாளர்- பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா. இறந்த காலத்தை ஞாபகமூட்டும் நடமாடும் பிரமிட் அப்போது செல்வம் இல்லை, சிறகுகள் இருந்தது. இப்போது செல்வம் இருக்கிறது சிறகுகள் இல்லை. அது இளமை அறிவை வரவு வைத்த காலம். இது இளமை அறிவைச் செலவு செய்யும் காலம். வீடணனும் மக்கள் பிரதிநிதியும் இ. சர்வேஸ்வர- லோ. துஷிகரன், தசரதனும் மக்கள் பிரதிநிதியும் ந. ஐங்கரன், தெ. ஹர்சன் , பரதனும் மக்கள் பிரதிநிதியும் செ. சொமிசன், த. கருணாகரன்.

மனிதர்களில் விட்டில்கள் உண்டு. பூத்துக் குலுங்கும் பூக்கள் அழைத்தாலும் பூக்களில் வாயூன்றித் தேன் குடிக்கத் தெரியாமல் இலைகள் தின்னும் விட்டில் மனிதர்கள்.

மனிதர்களில் குரங்குகள் உண்டு. தங்கக் கிண்ணத்தோடு அப்பம் கிடைத்தாலும் அப்பம் கவர்ந்து கொண்டு தங்கக் கிண்ணத்தைத் தரையில் எறிந்து விடும் குரங்கு மனிதர்கள்.



புட்டியின் மூடி திறக்க இளைஞன் தவித்தான். கிழவன் தடுத்தான்.

சபையின் சிந்தனையினை நோக்கும் போது [illegible] விலை உயர்ந்த [illegible] விட்டுன் முன் பாக நிறுத்தியிருந்தார். அவ் வழியால் சென்ற தெருநாய் ஒன்று காரின் மீது சிறுநீர் கழித்தது. இதைப் பார்த்து அவர் சிரித்தார். இதனைப் பார்த்து கொண்டிருந்த அவரின் உதவியாளர். ஐயா நீங்கள் ஏன் நாயைப் பார்த்து விரட்டி விடாமல் சிரித்துக் கொண்டிருக்கின்றீர்கள் என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

அதற்கு அவர் மிகவும் சாந்தமாக அந்த நாய் அதன் அறிவுக்கு எட்டியதைச் செய்கின்றது. அதற்கு இக்காரின் மதிப்பு தெரியாது. "அதைப் பற்றிச் சொன்னாலும் அதற்குப் புரியாது".

இது போலத்தான் உங்கள் வாழ்வில் உங்கள் மதிப்பை அறியாதவர்கள் உங்களை அவமானப்படுத்தும் போது புன்னகையுடன் கடந்து செல்லுங்கள். உளியால் செதுக்கிய உங்கள் பெயர் பல்லாண்டு பல்லாண்டு வாழும் என்பதை நான் குறித்துக் கொள்ளவில்லை. என் [illegible] டாய் பொறித்துக் கொண்டேன்.

வழக்காடு மன்றம். பொருள் கம்பகாவியத்துறவியர் நெறி பிறந்தது குற்றம், வசிட்டர்-தசரதனுக்கு அறம் உரைக்கத்தவறியமை, சபரி- "இராமனைப் பிழையாக வழிப்படுத்தியமை", நடுவர்- கம்பவாரிதி- இ. ஜெயராஜ், தேனுண்ட வண்டாகக் கூட்டம் தமிழ்த் தேனுண்டு தள்ளாடியது. வாதிகள், ஸ்ரீ பிரசாந்தன்- தி. வேல்நம்பி, பிரதிவாதிகள்:- ஐ. கதிர்காமசேகரன்-ந. விஜயசுந்தரம்.

இவர்கள் வானத்திலிருந்து வந்தவர்களில்லை. வாழ்க்கையிலிருந்து வந்தவர்கள் என்பது வெளிப்பட்டது. இவர்களுக்குள் இருப்பதெல்லாம் பெரிய மனமத லட்சணங்கள் இல்லை. மனித லட்சணங்கள்- சூரியன் தன்னை நேசிக்கிறதா என்பது தாமரைக்கு முக்கியமில்லை. சூரியனை நேசிப்பது தாமரையின் தர்மம் என்பது புலப்பட்டது.இதயத்தின் எடுக்க முடியாத பிரதேசத்தில் விழுந்து விட்டது. வாழ்க்கையில் இன்னும் மிச்சமிருக்கிறது என்பதை அடிக்கடி நினைவூட்டும் அடையாளங்கள் இவை என்பது புலப்பட்டது. சொல்லாண்ட தமிழ் போல் வாழ்க.

இவ்வாண்டு கவிச்சக்கரவர்த்தி கம்பனின் விழாவில் கவியரங்கு நடைபெறவில்லை என்பதும், காலை- மாலை மண்டபம் நிரம்பிய கம்ப ரசிகர்களால் சபை பொலிவு பெற்றதும் இரண்டு நாட்கள் மதிய உணவு சபையோருக்கு வழங்கப் பெற்றதும் கம்பனவன் புகழ்பாட எழுந்தால். அவை கண் முன்னே கம்பனுரு காணபார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஜவ்வரிசி

**Botanical name- Metroxylon sagu**
**Family- Palmaceae**
**Engl-Sago**

தற்போது விற்கப்படும் ஜவ்வரிசியானது மரவள்ளிக் கிழங்கை மாவாக்கி அதிலிருந்து தயாரிக்கப்படும் போலியான ஜவ்வரிசியாகும். தூய இனமான ஜவ்வரிசியானது Metroxylon sagu எனப்படும் ஒரு வகையான பனை மரத்தின் தண்டிலிருந்துதான் தூய இனமான ஜவ்வரிசி பெறப்பட வேண்டும்.

சித்தர்கள் தெளிவாக ஜவ்வரிசியின் பிறப்புப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

இம் மரத்தின் தண்டின் நடுவிலுள்ள மரச்சோற்றை உலர்த்திப் பொடித்து ஜவ்வரிசி எடுக்கப்படுவதாகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இனிப்புச் சுவையாகவும் தட்பமான அதாவது குளிர்ச்சியான வீரியமும் இனிப்பு விபாகத்தையும் கொண்டுள்ளது.

உடலிற்கு குளிர்ச்சியையும், பலத்தையும் கொடுக்கக் கூடியது. இதை வேக வைத்து கூழ் போலக் காய்ச்சி மெலிந்த தேகிகட்கும் கழிச்சல் உடையவர்களுக்கும் கொடுக்கலாம்.

இவ் தூய ஜவ்வரிசியானது பொதுவாக ஜாவா தீவிலிருந்து வருவிக்கப்படுவதால் ஜாவா அரிசி என அழைக்கப்பட்டது.அது மருவி ஜவ்வரிசி என அழைக்கப்படுகிறது. இவ் ஜாவா தீவு இந்தோனேசியா நாட்டிலுள்ளதாகும்.

பொதுவாக ஜவ்வரிசியில் அதிகளவு காபோவைதரேற்றுச் சத்து உண்டு. 100 கிராம் ஜவ்வரிசியில் 351 கலோரிகள் உண்டு. 87% மாச்சத்துத் தான், 0.2% புரதம் உண்டு, 0.2% கொழுப்புச் சத்து உண்டு.

தூய ஜவ்வரிசிக்கு நிறைய மருத்துவப் பண்புகள் உண்டு. இருதய நோய்களிற்கும் சிறந்தது. அத்துடன் Gluten Free ஆன உணவுக் கூறுமாகும். அத்துடன் நாகச்சத்தும் உண்டு. தாதுச் சத்துக்கள் கொஞ்சம் குறைவாகத்தான் காணப்படும்.

நல்ல சக்தி தரக்கூடிய தன்மை இருப்பதனால் கூடுதலாக உடற்பயிற்சி செய்பவர்கள், நல்ல சக்தி கிடைக்க வேண்டும் போன்ற சந்தர்ப்பங்களில் இவ் ஜவ்வரிசி சேர்ந்த பாயாசம் மற்றும் உணவு முறைகளாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் மரவள்ளிக்கிழங்கு மாவிலிருந்து தயாரிக்கப்படும் போலியான ஜவ்வரிசிக்கும் கலோரி, சக்தி பெறுமானம் அதேபோல் இருக்கும். ஆனாலும் மரவள்ளிக் கிழங்கிற்கு இருக்கும் அதே பக்கவிளைவுகள் அதிலிருந்து தயாரிக்கப்படும் ஜவ்வரிசியை பயன்படுத்துவதனாலும் ஏற்படும். உதாரணமாக வயிற்றுப் பொருமல், வாய்வுத் தொல்லை போன்றன ஏற்பட வாய்ப்புண்டு. தூய ஜவ்வரிசியானது இரத்த சிவப்பு அணுக்களை அதிகரிக்க உதவுகிறது.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

உடல் நலம் சரியில்லாதவர்கட்கு உடனடி ஆற்றலையும், செரிமான சக்தியையும் வழங்குகிறது.

நமது உணவுக் கால்வாய், வயிறு, குடல் ஆகியவற்றில் ஏற்படும். புண்களை குணப்படுத்துகிறது. எலும்புகள், மூட்டுக்கள் மற்றும் தசைகளை வலுப்படுத்துகிறது. உடற் சூட்டை தணிப்பதுடன் கலங்களைப் புதுப்பிக்கவும் உதவுகிறது. ஜவ்வரிசியில் இருக்கும் கல்சியம், மக்னீசியம் சத்துக்கள்




என்புகளின் அடர்த்தியை அதிகப்படுத்தி என்புகளை பலப்படுத்துகிறது. கர்ப்பமாக இருக்கும் பெண்கள் உங்கள் உணவு முறையில் ஜவ்வரிசியை சேர்ப்பது ஆரோக்கியமான விடயமாகும். ஜவ்வரிசியில் உயிர்ச்சத்து B6 மற்றும் போலேற் நிறைந்துள்ளது.

அவை கரு வளர்ச்சிக்கு தேவையான சில ஊட்டச் சத்துக்களை வழங்குகிறது. ஜவ்வரிசியானது அதிகமான காபோவைதரேட்டுக்களை கொண்டிருப்பதால் அதாவது சர்க்கரை உயர்த்தும் திறன் அதிகமாக உள்ளதால் சர்க்கரை நோயாளிகளுக்கு இரத்தத்தில் சர்க்கரையின் அளவை அதிகரிப்புச் செய்யலாம்.

எனவே நீரிழிவு நோயாளிகள் இது சேர்ந்த உணவுக் கூறுகளை தவிர்ப்பது நல்லது. உடல் எடை குறைவாக, ஒல்லியாக இருப்பவர்கள் உடல் எடையை அதிகப்படுத்த ஜவ்வரிசி வடை, பாயாசம், கிச்சடி போன்றன தயாரித்து பயன்படுத்தலாம். வாரத்திற்கு இரண்டு நாட்களாவது பயன்படுத்தலாம். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகமாக்கும் தன்மை இவ் ஜவ்வரிசியை சாப்பிடுவதால் ஏற்படும்.

மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கும் ஆற்றலும் ஜவ்வரிசியினை அன்றாட உணவில் சேர்ப்பதால் கிடைக்கும் நன்மையாகும். பற்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். ஜவ்வரிசியில் இருக்கும் பொட்டாசியம், சத்தானது குருதி அமுக்கத்தை சீராகப் பேண உதவும். தூய ஜவ்வரிசி ஆனது சவ்வரிசி மரமான Metroxylon sagu என்ற மரத்தின் தண்டுகளின் நடுப்பகுதியில் சேமிக்கப்படும் மாப்பொருளிலிருந்து தயாரிக்



கப்படுகிறது. ஜவ்வரிசி பெறுவதற்காகப் பயிர் செய்யப்படும் மரங்கள் பூந்துணர் தோன்றிய உடனேயே வெட்டி வீழ்த்தப்படுகிறது. பின்னர் குற்றிகள் துண்டங்களாக வெட்டப்பட்டு பிளக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து சோறு (Pith) எனும் நடுப்பகுதி பிரித்தெடுக்கப்பட்டு தூளாக்கப்படுகின்றது.

இவ்வாறு தூளாக்கப்பட்ட பகுதியில் மாப்பொருளோடு நார்கள் கலந்திருக்கும். இத்தூளை நீரோடு சேர்த்துப் பிசைந்து அரிதட்டு ஒன்றினூடாக வடியச் செய்வதன் மூலம் மாப்பகுதியிலிருந்து நார்கள் அகற்றப்படுகின்றன.


பல தடவைகள் இவ்வாறு நீரினால் அலசிய பின்னர் மாப்பகுதி உபயோகத்திற்கு ஏற்றதாக மாறிவிடுகிறது. இவ்வாறு பெறப்பட்டதே சித்தர் கூறியதும் சித்த மருத்துவத்தில் கூறிய மருத்துவப் பண்புகள் நிறைந்த ஜவ்வரிசியுமாகும்.

"மேகமத்தி மேகஞ்சீழ்
மேகரத்த மேகமம் போற்,
தேகத்திற்றாதுவுஞ்சி
லேஷ்மமும் உண்டாகு மெழிற்
செவ்வரிப்படர்ந்தவிழித்
தேமொழியாமா தேவுலகிற்
சவ்வரிசியின் குணத்தைச்
சாற்று இதனால் பிரமேகம்,
எலும்பைப் பற்றிய மேகம்,
கீழ்மேகம், உதிர மேகம் தீரும்
சுக்கிலம் பலமடையும்."

## '2025 ஆம் ஆண்டின் SLIM Kantar People's Banking Services Brand' விருதை வென்றது இலங்கை வங்கி!




விளம்பர விபரணம்



இலங்கையின் முன்னணி வங்கியாக தனது நிலையை மேலும் வலுப்படுத்திக்கொள்ளும் வகையில், இலங்கை வங்கி (BOC) SLIM Kantar People's Banking Services Brand of the Year 2025 விருதை வென்றுள்ளது. வாடிக்கையாளர் விருப்பங்களை அடிப்படையாகக் கொண்ட இந்த அங்கீகாரம், இலங்கை வங்கியின் நிதித்துறையில் நிலவும் வலுவான அடிப்படையையும், வாடிக்கையாளர்களுடன் கொண்டுள்ள நம்பிக்கையான உறவையும் வெளிப்படுத்துகிறது.

SLIM Kantar People's Awards இலங்கையின் முக்கியமான வணிக விருதுகளில் ஒன்றாகும். இதில் வெற்றியாளர்கள் மக்கள் கருத்தின் அடிப்படையில் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) ஏற்பாடு செய்த இந்த விருது, Kantar ஆல் நடத்தப்பட்ட சுயாதீன கணக்கெடுப்பின் மூலம் வழங்கப்பட்டது. இலங்கை வங்கி தொடர்ந்து இந்த விருதைப் பெறுவது வாடிக்கையாளர்களின் வாழ்க்கையில் அதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகிறது.

இலங்கை வங்கி தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி சமீர டி. லியனகே தனது கருத்தில், "SLIM Kantar People's Awards இல் 'People's Banking Services Brand of the Year' விருதை மீண்டும் வென்றது, இலங்கை வங்கி மீது வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் வலுவான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இது நவீன, அணுகக்கூடிய, மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய வங்கிச் சேவைகளை வழங்கும் எங்கள் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறது. நாங்கள் எதிர்கால வங்கித் துறையை நம்பிக்கை, நிலைத்தன்மை மற்றும் சிறந்த சேவையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்குவதற்காக தொடர்ந்து செயற்படுகிறோம்," எனக் கூறினார்.

இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் நிலையான ஆதரவுக்கு நன்றி தெரிவித்து, வாடிக்கையாளர் முன்னுரிமை அணுகுமுறையை தொடர்ந்து பின்பற்றுவதற்கு உறுதியளித்துள்ளது. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் சந்தை மாற்றங்களுக்கு ஏற்ப செயற்பட்டு, இலங்கையின் பொருளாதார நிலைத்தன்மை மற்றும் நிதி நலனை மேம்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துவதாக வங்கி தெரிவித்துள்ளது.

85 ஆண்டுகளுக்கும் மேலாக, BOC இலங்கையின் நிதித் துறையில் ஒரு முக்கிய பங்காற்றி வருகிறது. 2300 இற்கும் மேற்பட்ட சேவை மையங்களுடன், வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவைகளை எளிதில் அணுகும் வசதியை வழங்குகிறது.

2024 ஆம் ஆண்டில் உலகின் சிறந்த 1000 வங்கிகளில் ஒரே இலங்கை வங்கியாக தேர்வாகியுள்ள இலங்கை வங்கி The Banker UK சஞ்சிகையிடமிருந்து 2021, 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் 'Banker of the Year' விருதை பெற்றுள்ளது. மேலும், Brand Finance Lanka ஆல் இலங்கையின் முதற்தர வங்கித் துறை நாமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கி சர்வதேச ரீதியில், லண்டன் (UK), மாலே மற்றும் ஹூல்ஹூமாலே (மாலை தீவுகள்), சென்னை (இந்தியா), மற்றும் சீஷெல்ஸ் ஆகிய இடங்களில் வலுவான கிளை வலையமைப்பை நிறுவியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக காசநோய் தினம் மார்ச்-2025

உலக காசநோய் தினமானது 24 மார்ச் 2025 அன்று "ஆம்" நாம் காசநோயை முடிவுக்கு கொண்டு வர முடியும், அர்ப்பணம், முதலீடு வழங்கல் என்ற கருப்பொருளின் கீழ் நினைவு கூறப்படும்.

உலக சுகாதார அமைப்பின் (WHO) மதிப்பீடு ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 14.000 காசநோய் நோயாளிகள் கண்டறியப்பட வேண்டும். இருப்பினும் ஆண்டு தோறும் சுமார் 9.000 - 10000 காசநோயாளிகள் மட்டுமே கண்டறியப்படுகின்றனர். இதன் விளைவாக சமூகத்தில் கண்டறியப்படாத 4000-5000 காசநோயாளிகள் காணப்படுகின்றனர். 2024 ஆம் ஆண்டில் மொத்தம் 9180 (ஆண் 5921 மற்றும் பெண் 3259) காசநோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

2035 ஆம் ஆண்டிற்குள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இறுதி காசநோய் இலக்குகளை அடைவதற்கு இலங்கை உறுதி பூண்டுள்ளது. இது 2015 ஆம் ஆண்டின் அடிப்படையுடன் ஒப்பிடுகையில் காசநோய் நிகழ்வை 90% இறப்பை 95% மற்றும் பேரழிவு செலவை பூச்சியமாக குறைப்பதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மொத்த சனத்தொகை சராசரியாக 620.000 ஆகும். இந்த சனத்தொகையில் 100,000 இற்கு 62 காசநோயாளர்களை இனங்காணவேண்டும். அண்ணளவாக ஆண்டொன்றிற்கு 385 காசநோயாளர்கள் இனங்காணப்பட வேண்டும்.

எனினும் இக் காசநோயளர்களில் சராசரியாக 125 நோயாளர்களை கண்டுபிடிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. ஆகவே இக் காசநோயாளர்களை கண்டறிவதற்கு மக்களாகிய உங்களது முழு ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.


2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காசநோயாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு 2015-274, 2016-291, 2017-274, 2018-302, 2019-272, 2020-218, 2021-201, 2022-221, 2023-253, 2024-260 ஆகும்.

2015ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காசநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை பின்வருமாறு 2015-00, 2016-04, 2017-07, 2018-06, 2019-03, 2020-06, 2021-00, 2022-02, 2023-02, 2024-13 ஆகும்.

2015ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காசநோயாளாகளின் இறப்பு எண்ண்ிக்கை பின்வருமாறு 2015-22, 2016-18, 2017-25, 2018-17, 2019-20, 2020-20, 2021-15, 2022-00, 2023-36, 2024-34 ஆகும்.

காசநோய் சிகிச்சையின் போது தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கு மேல் சிகிச்சை பெறாமல் இருந்தவர்களின் எண்ணிக்கை 2016-03, 2017-01, 2018-04, 2019-02, 2020-02, 2021-00 2022-04, 2023-02 ஆக காணப்படுகின்றது.

மயிலிட்டியில் இயங்கிய காசநோய் வைத்தியசாலை தற்போது கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் கோப்பாய் வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் சில ஊழியர்களுடன் இயங்கி வருகின்றது.



இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களிற்கு மார்பு நோய்ச் சிகிச்சை விசேட வைத்திய நிபுணரின் வழிகாட்டலின் கீழ் சிகிச்சை வழங்கப்படுகின்றது.

நாட்டில் இடம் பெறும் அதிகளவான உயிரிழப்பிற்கு காரணமான மூன்றாவது நோயாக காசநோய் காணப்படுகின்றது. தொடர்ச்சியாக இரண்டு வாரத்திற்கு மேற்பட்ட இருமல் மாலை நேரத்தில் காய்ச்சல், இரவில் வியர்த்தல், உணவில் நாட்டம் இன்மை, உடல் நிறை குறைவடைதல், சளியுடன் இரத்தம் வெளியேறல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக கருதப்படும்.

இந்த நோய் அறிகுறிகள் இருந்தால் அந்தந்த பிரதேசத்தில் அமைந்துள்ள அரச வைத்தியசாலைகளிற்கு சென்று சாதாரண சளிப் பரிசோதனையினை இலவசமாக செய்து கொள்வதன் மூலம் இந்த நோயினைக் கண்டறிய முடியும்.

ஒருவரிற்கு காச நோய் ஏற்பட்டால் 06 மாதத்திற்கு நேரடிக் கண்காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளைப் பெற்றுக்கொண்டால் அதனை முற்றாக குணப்படுத்த முடியும்.


காசநோயினால் பீடிக்கப்பட்ட நோயாளர்களுக்கு அவர்களின் சிகிச்சை முடியும் வரை மாதம் 5000 ரூபா வீதம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரால் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கான (சத்துமா) சுகாதார அமைச்சினால் திரிபோசாவும் வழங்கப்படுகின்றது.

சளி வளர்ப்பு பரிசோதனை நிலையம் வடக்கு மாகாணத்தில் எமது மாவட்ட சிகிச்சை நிலையத்தில் மட்டும் காணப்படுகின்றது. Ultra cartridges பயன்படுத்தப்பட்டு 2 மணி நேரங்களில் காசநோய் உள்ளதா என்பதனை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்

2017 ஆம் ஆண்டு எமது மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்திற்கு எமது சிறப்பான செயற்பாடுகளையிட்டு காசநோய் தடுப்பு மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய செயற்றிட்டம் (NPTCCD) Merit Award கிடைக்கப்பெற்றமையை உங்களுக்கு பெருமையுடன் அறியத் தருகின்றோம். அத்துடன் வாரத்தில் ஏழு நாட்களும் திறந்து மருத்துவ சேவையினை வழங்குகின்ற நிலையமாக யாழ்ப்பாணம் மார்பு நோய்ச்சிகிச்சை நிலையம் காணப்படுகின்றது.

காசநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் காசநோய்க்கான மருந்துகளை பாவிக்காமல் இடை நடுவில் சிகிச்சையை தன்னிச்சையாக நிறுத்தும் பட்சத்தில் அவர்களுக்கு நோயின் தன்மையையும் மற்றும் சிகிச்சையின் முக்கியத்துவத்தையும் பற்றி எங்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

மீண்டும் மீண்டும் எங்களால் வழங்கப்படும் ஆலோசனைகள் நிராகரிக்கப்படும் பட்சத்தில் எமக்கு அவர்களை மீள சிகிச்சைக்கு கொண்டு வருவதற்குரிய ஒரே வழிமுறை சட்ட நடவடிக்கை என்பதால் நீதி மன்றத்தை நாடுவதன் மூலம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இந் நோயாளிகளினை மீண்டும் சிகிச்சை முறைக்குட்படுத்தப்படுவார்கள். (2024 ஆம் ஆண்டு) 04 நோயாளிகளை சட்ட நடவடிக்கை மூலம் நீதவானின் தீர்ப்பிற்கு இணங்க சிகிச்சைக் குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.



உலக காச நோய் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது

காசநோயாளிகளே நீங்கள் இலங்கை திருநாட்டின் பெறுமதி மிக்க சொத்துக்கள். உங்கள் வாழ்வின் சுகாதார மேம்பாட்டிற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், குடும்ப வளர்ச்சிக்காகவும் சுகாதார அமைச்சு, வைத்திய நிபுணர்கள், மருத்துவர்கள், மற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள் NPTCCD பணிப்பாளர், சமுதாய மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள், யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர்கள், சுவாச வைத்திய நிபுணர் மற்றும் வைத்திய நிபுணர்கள், மற்றும் சுகாதார ஊழியர்கள், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை Respiratory Unite சுவாசநோய் வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், சுகாதார ஊழியர்கள் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் தாதிய உத்தியோகத்தர், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள், சுகாதார ஊழியர்கள், மற்றும் Wellisara Hospital அனைத்து மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், NTRL பணியாற்றும் நுண்ணியல் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், மற்றும் யாழ்ப்பாணம் மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தில் பணியாற்றும் வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதார தொழில் நுட்பவியாலாளர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் உங்களுக்காக தங்களை அர்ப்பணிக்கின்றார்கள்.

இ.மணிவாசகன்
யாழ்.மாவட்ட
காசநோய்க்கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்பு நோய்ச்சிகிச்சை நிலையம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை சரியாக உணரும் பொழுது வீணான எண்ணங்கள் என்னும் விலங்கிலிருந்து விடுபட முடியும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாற்றப்படும் குவிமையப் புள்ளி கலைந்து போகும் இலக்கு

ஒரு நேர்கோட்டை சிறிய கோடாக மாற்றுவதாக இருந்தால், அதற்கு அருகில் இன்னோர் பெரிய கோட்டை வரைந்து விடும் முறைமை உண்டு.

அதுபோல ஒரு வெள்ளைத் தாளில் இடப்படும் ஒரு சிறிய கரும் புள்ளி, தாளின் வெண்மை முழுவதையும் ஓரங்கட்டி தன் மீது அவதானத்தைத் திசைதிருப்பி விடும்.

இவ்வாறாகப் பலவற்றை நாம் அனுபவ ரீதியாகக் கண்டு வருகின்றோம்.

இதில் எங்கள் இனப்பிரச்சினை குறித்த விடயமும் இடம்பிடித்துள்ளது.

ஆம், தமிழ் மக்களின் உரிமை என்ற இலக்கோடு பயணித்த எம் இனம் இன்று நிலை மாற்றம் அடைந்துள்ளது.

இதை இன்னும் சுருங்கக் கூறுவதாயின், எங்களின் உரிமை சார்ந்த இலக்கு திசை திருப்பப்பட்டுள்ளது எனலாம்.

இதை நாம் கூறும்போது, திசை திருப்பம் அல்லது குவிமையமாற்றம் எவ்வாறு இடம் பெறுகிறது. அதை யார் செய்கிறார்கள். எங்ஙனம் எம் இனம் திசைமாறியது என்ற கேள்விகள் இப்போதைக்கு அமைதி கொள்ளட்டும்.

மாறாக, குவிமைய மாற்றம் எவ்வாறாக உள்ளது என்பதைப் பார்ப்பது இங்கு பொருத்துடையது.

ஆம், மன்னார் திருக்கேதீச்சரத்தில் நுழைவாயில் வளைவு உடைக்கப்படுகிறது. மன்னாரில் தமிழ் மக்களிடையே மோதலை ஏற்படுத்துவதற்கான திசைதிருப்பம் அது.

இதுபோல முல்லைத்தீவில் குருந்தூர் மலை, வவுனியாவில் வெடுக்குநாறிமலை, யாழ்ப்பாணத்தில் தையிட்டி விகாரை எனக் குவிமையங்கள் உருவாக்கப்படுகின்றன.

ஆம், குருந்தூர்மலையிலும் வெடுக்குநாறி மலையிலும் சிவவழிபாடு தொன்மையாக இடம்பெற்று வருகையில், அங்கு திடீரென பௌத்த விகாரைகளை அமைக்கின்ற ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

குறித்த இரண்டு இடங்களும் பௌத்த விகாரைகள் இருந்த இடம் எனத் தேரர்கள் முன்மொழிய, தொல்லியல் திணைக்களம் அதனை ஆமோதிக்கிறது.

சைவர்களின் வழிபாடு மறுக்கப்படுகிறது. அதேநேரம் யாழ்ப்பாணம் தையிட்டியில் தனியாருக்குச் சொந்தமான காணியில் விகாரை கட்டப்படுகிறது. கூடவே பௌத்த துறவிகள் தங்குவதற்கும் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

இதற்கும் மேலாக, திருகோணமலை கன்னியாவில் வெந்நீரூற்று அமைந்த இடத்தில் புத்தரை நிர்மாணிக்கும் முயற்சிகள்.

தவிர, திருக்கோணேச்சரத்தில் தொல்லியல் திணைக்களத்தின் அடாவடித்தனம். மணிக்கூட்டுக் கோபுரம் அமைப்பதற்குக்கூட அங்கு தடை.

இவ்வாறாக மையப்புள்ளிகள் நகர்த்தப்பட, எங்கள் அரசியல்வாதிகளும் இலக்கைத் தொலைத்து விட்டு; பாராளுமன்றத்தில் சொந்த விடயம் பேசுகின்ற பரிதாபம்.

இங்குதான் மையப்புள்ளிகளை மாற்றி தமிழர்களின் உரிமை என்ற இலக்கு திசை திருப்பப்படுகின்றது என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

உள்ளூராட்சிசபை வேட்பாளர்கள் ●●●●●●●●●

## செலவறிக்கையை சமர்ப்பிக்கத் தவறின் வாக்குரிமையை இழக்க நேரிடலாம்

### எச்சரிக்கிறது பப்ரல்

*(கொழும்பு)*

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் தேர்தல் தொடர்பான செலவு அறிக்கையை சமர்ப்பிக்க தவறுபவர்கள் மூன்று வருடங்களுக்கு வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரிடும் என பப்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்ட 150க்கும் அதிகமான வேட்பாளர்கள் உரிய திகதிக்கு முன்னதாகத் தங்களது செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறியுள்ளனர்.

இந்தமுறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 80,000 ற்கும் அதிகமானோர் போட்டியிடுகின்றனர்.

இந்தநிலையில் குறித்த வேட்பாளர்களில் எவரேனும் தங்களது தேர்தல் செலவு அறிக்கையை உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் மூன்று ஆண்டுகளுக்கு வாக்களிப்பதற்கான மற்றும் தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமையை இழக்க நேரிடும். அத்துடன் பத்து இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

எனவே செலவு அறிக்கை தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துமாறு சகல வேட்பாளர்களையும் பப்ரல் அமைப்பு கோருவதாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். *(ந-7)*

## தோட்டாக்களுடன் ஒருவர் அதிரடிக் கைது

*(கொழும்பு)*

பொரளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓவல் மைதானத்திற்கு அருகில் தோட்டாக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவிற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து T-56 ரக துப்பாக்கிக்கான 07 தோட்டாக்கள் மற்றும் LMG தோட்டா ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பத்தரமுல்லைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதான இளைஞர் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். *(ந-7)*

## சுமுகமான முறையில் உள்ளூராட்சித் தேர்தல்

### பிரதி அமைச்சர் ருவான் செனரெத் உறுதி

*(கொழும்பு)*

உள்ளூராட்சித் தேர்தலை சுமுகமாகவும் பாதுகாப்பாகவும் நடத்துவதற்கு எமது அரசாங்கம் உறுதிபூண்டிருக்கின்றது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவான் செனரத் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தல் செயல்முறையை முன்னெடுப்பதற்கு தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். முந்தைய காலத்தில் தேர்தல் பதற்றங்களால் ஏற்பட்ட சவால்களை நாங்கள் நன்கு அறிவோம்.

நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தலை உறுதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் தேர்தல் செயல்முறையை முடிந்தவரை நியாயமானதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதற்காக நாங்கள் பணியாற்றி வருகிறோம் என்றார். *(ந-7)*

## கணனி மயப்படுத்தப்படும் குற்றவாளிகளின் கைரேகைகள்

*(கொழும்பு)*

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் நீதிமன்றக் குற்றவாளிகளின் ஒரு மில்லியன் கைரேகைகள் தற்போது விசாரணைகளுக்காக கணனிமயமாக்கப்பட்டுள்ளன.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பிரிவு மற்றும் பொலிஸ் கைரேகை அலுவலக அதிகாரிகள் இணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குமார தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு தரவுகள் தொடக்கம் இதுவரையான காலப்பகுதி வரையான தரவுகள் இதற்குள் உள்ளடங்குகின்றன.

இதன்படி விசாரணை நோக்கங்களுக்காக தேவையான எந்த நேரத்திலும் கைரேகைகளைப் பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். *(ந-7)*

## வாகன விபத்து நால்வர் காயம்

*(பதுளை)*

பதுளை - பண்டாரவளை பிரதான வீதியின் தோவ பகுதியில் பேருந்து ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த வாகன விபத்தில் நால்வர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் நிலைமை பாரதூரமாக இல்லை எனப் பதுளை வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பேருந்தின் வேகத் தடை அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். *(ந-7)*

## சுகாதாரப் பரிசோதகர்கள் பெயரில் மோசடி

*(கொழும்பு)*


பொது சுகாதாரப் பரிசோதகர்கள் எனத் தங்களை அடையாளப்படுத்தி இடம்பெறும் மோசடி குறித்து பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்கள் இது தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துக்குடா அறிவுறுத்தியுள்ளார். *(ந-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## பஞ்சாப் கிங்ஸின் இலக்கு இதுதான் ரிக்கி பொண்டிங் கூறியதென்ன?



ஐபிஎல் கோப்பையை வெல்வதே பஞ்சாப் கிங்ஸின் உடனடி இலக்கு எனவும், பஞ்சாப் கிங்ஸ் அணியை சிறந்த அணியாக உருவாக்குவதே அடுத்த இலக்கு எனவும் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பேசியதாவது, பஞ்சாப் கிங்ஸின் இலக்கு ஐபிஎல் தொடரில் சம்பியன் பட்டம் வெல்வது. இதுவரை விளையாடிய பஞ்சாப் கிங்ஸ் அணிகளிலேயே மிகவும் சிறந்த பஞ்சாப் கிங்ஸ் அணியை உருவாக்கப் போகிறோம் என முதல் நாள் பயிற்சியின் போது, பஞ்சாப் கிங்ஸ் வீரர்களிடத்தில் கூறினேன்.

அந்த பயணத்தில்தான் நாங்கள் இருக்கிறோம். ஆனால், இந்த மாற்றம் ஒரே நாளில் வந்துவிடாது. அதனை வீரர்கள் தங்களது கடின உழைப்பால் உருவாக்க வேண்டும் என்றார்.

பஞ்சாப் கிங்ஸ் அணி நாளை செவ்வாய்க்கிழமை அகமதாபாதில் நடைபெறும் அதன் முதல் போட்டியில் குஜராத் டைட்டன்ஸை எதிர்த்து விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## கோலிக்கு பி.சி.சி.ஐ கௌரவம்



இந்தியன் ப்ரீமியர் லீக் (ஐபிஎல்-2025) 18 ஆவது கிரிக்கெட் தொடரானது நேற்று முன்தினம் கொல்கத்தா ஈடன் கார்டன் திடலில் ஆரம்பமானது.

ஐபிஎல் கிரிக்கெட்டில் கடந்த 18 ஆண்டுகளாக அதன் ஒவ்வொரு தொடரிலும் தவறாது விளையாடி வரும் நட்சத்திர வீரர் விராட் கோலிக்கு ஐபிஎல் தொடக்கவிழாவில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம்(பி.சி.சி.ஐ) நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தது.

விராட் கோலியின் கிரிக்கெட் சீருடையில் '18' என்ற எண்ணே குறிக்கப்பட்டிருக்கும். இந்த நிலையில், அதனை மையப்படுத்தி, இன்று அவருக்கு வழங்கப்பட்டுள்ள விருதில் '18' என்ற எண் பெரிதாக குறிக்கப்பட்டிருந்தது பார்வையாளர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. (6-8)

## இன்றைய ஆட்டங்கள்




## கோலி, சால்ட் அரைசதம் பெங்களூர் அணி வெற்றி

கொல்கத்தா அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது பெங்களூர் அணி.

கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி. எல் போட்டியில் "நடப்பு சம்பியன்" கொல்கத்தா, பெங்களூர் அணிகள் மோதின. "டாஸ்" வென்ற பெங்களூர் கப்டன் ரஜத் படிதர், "பவுலிங்" தேர்வு செய்தார்.

கொல்கத்தா அணிக்கு குயின்டன் டி காக் (4) ஏமாற்றினார். ராசிக் சலாம் வீசிய 4 ஆவது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த கப்டன் ரஹானே, சுயாஷ் சர்மா பந்தை சிக்சருக்கு அனுப்பி அரைசதம் கடந்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 103 ரன் சேர்த்த போது ராசிக் பந்தில் நரைன் (44) அவுட்டானார். குர்ணால் பாண்டியா "சுழலில்" ரஹானே (56), வெங்கடேஷ் (6), ரிங்கு சிங் (12) சிக்கினர். ஆன்ட்ரி ரசல் (4) சோபிக்கவில்லை. அங்கிரிஷ் ரகுவன்ஷி (30) ஓரளவு கைகொடுத்தார்.



கொல்கத்தா அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 174 ரன் எடுத்தது. ராமன்தீப் சிங் (6), ஸ்பென்சர் ஜான்சன் (1) அவுட்டாகாமல் இருந்தனர்.


பெங்களூர் அணிக்கு பில் சால்ட், விராட் கோலி ஜோடி நல்ல தொடக்கம் கொடுத்தது. வைபவ் அரோரா, வருண் சக்ரவர்த்தி ஓவரில் தலா ஒரு சிக்சர், 3 பவுண்டரி விளாசிய சால்ட், 25 பந்தில் அரைசதம் எட்டினார்.

ஸ்பென்சர் ஜான் சன் பந்தில் வரிசையாக 2 சிக்சர் பறக்க விட்டார் கோலி. முதல் விக்கெட்டுக்கு 95 ரன் சேர்த்த போது வருண் "சுழலில்" சால்ட் (56) சிக்கினார். தேவ்தத் படிக்கல் (10) நிலைக்கவில்லை. ஹர்ஷித் ராணா பந்தை பவுண்டரிக்கு விரட்டிய கோலி, 30 பந்தில் அரைசதம் கடந்தார்.

ஹர்ஷித் வீசிய 15 ஆவது ஓவரில் 4 பவுண்டரி விளாசிய கப்டன் ரஜத் படிதர் (34) நம்பிக்கை தந்தார். ஸ்பென்சர் ஜான்சன் பந்தில் வரிசையாக ஒரு சிக்சர், பவுண்டரி அடித்த லிவிங்ஸ்டன் வெற்றியை உறுதி செய்தார்.

பெங்களூர் அணி 16.2 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 177 ரன் எடுத்து, 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கோலி (59), லிவிங்ஸ்டன் (15) அவுட்டாகாமல் இருந்தனர். ஆட்டநாயகனாக குர்ணால்பாண்டியா தெரிவாகியிருந்தார். (6-8)

## குத்துச்சண்டை ஜாம்பவான் ஜார்ஜ்ஃபோர்மேன் காலமானார்



அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல குத்துச்சண்டை ஜாம்பவான் ஜார்ஜ் ஃபோர்மேன் தனது 76 ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவர் 2 முறை ஹெவிவெய்ட் சம்பியனும், உலகின் மிக வயதான ஹெவிவெயிட் உலக சம்பியனுமாக இருந்துள்ளார்.

குத்துச்சண்டை வளையத்தில் 'பிக் ஜார்ஜ்' என்று அழைக்கப்படும் இவர் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

தனது முதல் சம்பியன்ஷிப்பை வென்ற 21 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது சம்பியன்ஷிப்பையும் வென்றுள்ளார்.

மேலும் ஃபோர்மேன் குத்துச்சண்டை வாழ்க்கையில் 81 சண்டைகளில் 76 சண்டைகளில் வென்று அந்தப் போட்டிகளில் 68 'நோக் அவுட்' வெற்றிகள் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்ன...

அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்ற அவரது கோரிக்கையை கருத்திற் கொண்டு தேசபந்து, சிறைச்சாலைக்குள் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் செய்தித் தொடர்பாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

வெலிகம W15 ஹோட்டல் அருகில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவம் தொடர்பில் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடந்த 20 ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வாக்குச்சீட்டு...

ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் பல இடர்களுக்கு மத்தியில் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டு வேட்புமனுக்களை ஏற்றிருந்த போதிலும் வாக்குச்சீட்டு அச்சிட நிதி கிடைக்கவில்லை என அரச அச்சகம் தெரிவித்தமையால் தேர்தல் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## சட்டவிரோத...

யில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாகத் தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாகவே நேற்று அப்பகுதி முற்றுகையிடப்பட்டது.

குறித்த முற்றுகையின்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் அப்பகுதியிலிருந்து தப்பி ஓடிய நிலையில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணம் மற்றும் 2250 போத்தல் கோடாவும் 20 லீற்றர் கசிப்பும்பொலிஸாரால்மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,316)

## உழவு இயந்திரம்...

கப்பட்டபோதே மேற்படித் தகவல் வெளிவந்துள்ளது.

இதுதவிர, போலி ஆவணங்கள் ஊடாக மேலும் பல ஆயிரம் சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமையும் இதன்போது தெரியவந்துள்ளது.

உலகில் உழவுக்கு எனக் கூறி சொகுசு கார்கள் இறக்குமதி செய்த ஒரே நாடு இலங்கை என்று சம்பந்தப்பட்டவர்கள் பெருமைப்படலாம். (ந-7)

## ஒருங்கிணைப்புக்...

கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில் நாளைய கூட்டத்தில் இவ்விவகாரம் பேசப்படுபொருளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-க,7)

## பிக்குகள்...

இதன்போது பொலிஸார் குவிக்கப்பட்டுபாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அங்கு வந்திருந்த பொலிஸார், போராட்டக்காரர்களைக் கைது செய்வோம் என்று மிரட்டினர்.

திஸ்ஸ விகாரைப் பகுதியில் களஆய்வுகளை மேற்கொண்டு பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும் என்று பௌத்தசாசன அமைச்சர் சுனில் செனவி அறிவித்திருந்த நிலையில், அங்கு சட்டவிரோதக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தையிட்டியில் திஸ்ஸ விகா ரைக்கு மேலதிகமாக, அந்தப் பகுதியில் மிக இரகசியமான வகையில் வேறு சில சட்டவிரோதக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுவந்தன. இராணுவத்தினர் இந்தப்பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர்.

இராணுவத்தால் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கட்டிடங்களே நேற்று மதவழிபாடுகளுக்குப் பின்னர் திறந்து வைக்கப்பட்டன. அந்தக் கட்டிடங்கள் பிக்குகள் தங்குவதற்கான மடாலயமாக இருக்கலாம் எனத் தெரியவருகிறது. (ந-7)

## ஐரோப்பிய...

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள திருத்தங்கள் குறித்து முக்கிய அறிவிப்புகளை ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி கண்காணிப்புக் குழுவுக்கு அரசாங்கம் தெரிவிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிட்டது.

இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட மனித மற்றும் தொழிலாளர் உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றும் நல்லாட்சி கொள்கைகளை உள்ளடக்கிய விடயங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி கண்காணிப்புக் குழு இச்சந்திப்புக்களில் அவதானம் செலுத்தவுள்ளது.

மேலும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகம் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன், இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து அறியும் வகையில் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஐ.நா. பிரதிநிதிகளைச் சந்தித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள உள்ளது. மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் நிலை, பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாசார உரிமைகள் மற்றும் தொழிலாளர் உறவுகளை பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி கண்காணிப்புக் குழு இலங்கை விஜயத்தின் போது கூடுதல் அவதானம் செலுத்த உள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் குறித்து கூடுதல் அவதானம் செலுத்தப்படவுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் இலங்கையை ஜி.எஸ்.பி பிளஸ் திட்டத்தில் மீண்டும் இணைப்பதில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத் திருத்தம் ஒரு முக்கிய உறுதிமொழியாக இருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் பாகுபாடு காட்டாமை, இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களின் உரிமைகளுக்கும் மரியாதை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தொடர்ச்சியான பயன்பாடு மற்றும் அடிப்படை சுதந்திரங்களை பயன்படுத்துவதிலுள்ள தடைகள் போன்ற விடயங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படும்.

ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்கும் போது மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், நல்லாட்சி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என நான்கு துறைகளில் 27 நிபந்தனைகளை முன்வைக்கும்.

இலங்கைக்குத் தொடர்ச்சியாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்க வேண்டுமாயின் இந்த 27 நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம் உட்பட உறுதிமொழிகளை நிறைவு செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2524)

076 825 7716 (ஆகாஸ்)



## மணப்பெண் தேவை

1. சண்டிலிப்பாய் - தாவடி, இந்து, 1983, ரேவதி, MSc, Senior IT Engineer, UK Citizen, divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51761)
2. Jaffna Town, இந்து, 1988, சுவாதி, BSc (Hons) (UK), UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51747)
3. நல்லூர், இந்து, 1996, ரேவதி, MBBS, Doctor (Veterinary) மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51633)
4. புங்குடுதீவு, இந்து, 1983, அவிட்டம், Graduate Qualified Accountant, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (26294)
5. வண்ணார்பண்ணை - உடுவில், 1987, சித்திரை, MBA (Canada), Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (26184)
6. சாவகச்சேரி, இந்து, 1986, மிருகசீரிடம், A/L, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (26088)
7. புங்குடுதீவு, இந்து, 1984, பூராடம், Cheif Chef, France Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (25911)
8. அராலி - மாதகல், இந்து, 1986, பூரம், Tour Operator, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (28816)
9. பளை - மானிப்பாய், இந்து, 1979, கார்த்திகை, BA, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
10. ஆவரங்கால் - மட்டக்களப்பு, R/C, 1985, அஸ்வினி, MSc, Newzealand Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(955)

S.Sharma J.P
E.Mail:thaalee@yahoo.com
077 539 3728



## சிற்றூழியர் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனமொன்றுக்கு சிற்றூழியர் (பெண்) தேவை.

தொடர்பு : 076 097 3121



## வேலையாட்கள் தேவை

உணவகம் ஒன்றிற்கு
வேலையாட்கள் தேவை

(3738)

076 916 7325



மு/முல்லைத்தீவு றோ.க.த.ம.பா,
உண்ணாப்புலவு, முல்லைத்தீவு.

**பழைய மாணவர் சங்கக்கூட்டம் - 2025**

மேற்படி எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 30.03.2025 அன்று மாலை 3.00 மணிக்கு இடம்பெற இருப்பதனால் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதிபர் - மு/முல்லைத்தீவு றோ.க.த.ம.பா

(C-2526)



## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் லிங்கம் கூல்பார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
ஆண்/ பெண் இருபாலாரும்.

- சிற்றுண்டி பரிமாறுபவர் (Supplier)
- காசாளர் (Cashier)
- சிட்டை எழுதுநர் (Bill Clark)
- துப்பரவு பணியாளர் (Cleaner)

தொடர்புகொள்ள வேண்டிய நேரம் : காலை 9.00 - மாலை 5.30 மணிவரை

(3728)

லிங்கம் கிறீம் ஹவுஸ்
340c, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம். 077 711 1410


## ஐந்து நாள்...

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

பிரஸ்தாப குடும்பஸ்தருக்கு கடந்த 19ஆம் திகதி இரவு காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில் சிகிச்சைக்காக மறுநாள் காலை தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அதன்பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார்.

(ந-7)


## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-2525)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


# 100 வது பிறந்தநாள் நினைவுப் பகிர்வு




அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு மானிப்பாயில் அமைந்த "ஞானசம்பந்தர் இல்லத்தினை" அவரது வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## அமரர். ஞானசம்பந்தர் தையல்நாயகி

அவர்களின் 100 ஆம் ஆண்டு இன்று (24.03.2025)
பிறந்தநாள் நினைவுப்பகிர்வு

அன்னார் வைத்திலிங்கம் செல்லத்துரை (உடையார்) - சொர்ணம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் சிதம்பரநாதர் நாகலிங்கம் (பண்டிதர்) - தங்கமுத்து தம்பதிகளின் மூத்த மருமகளும் நாகலிங்கம் ஞானசம்பந்தரின் (இளைப்பாறிய காணிப்பதிவாளர், முன்னாள் வலிகாமம் மேற்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர், சமாதான நீதவான்) அன்பு மனைவியும் ஆவார்.

**100 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள் அம்மா....**

**என்றும் உங்கள் நினைவில்**
**மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

எங்களை அன்பாலும் பண்பாலும் அரவணைத்து வழி நடத்திய நாட்கள் கடந்து சென்றாலும் உங்களின் அரவணைப்பும், அறிவுரைகளும் என்றும் எம் மனங்களில் உயிர் வாழும் அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3732)

**பாசமிகு மகள் பவானி ஶ்ரீதரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.